ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1966/46 - 2016 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2016.05.13

*1966/46 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2)என்னும் பிரிவின் கீழ் மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

மரணம் அடைந்ததன் காரணமாக மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

திரு. வெதிகே நிமல் யசசிறி பீரிஸ் என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியை சேர்ந்தவரும் மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மஹாமரக்கலகே பர்ட்டி இஷான் சுரங்க பெரேரா என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது மொறட்டுவ மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மஹாமரக்கலகே பர்ட்டி இஷான் சுரங்க பெரேரா என்பவர் மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மொறட்டுவ மாநகர சபை.

நகர தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2016, மே 13.*

*5 - 933*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.